2025 – செப்டம்பர் மாதம் 02– ஆம் தேதி செவ்வாய்கிழமை
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர்* : 151/2024 C/w 152, 164, 165, 183, 184/2024

*2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02– ஆம் தேதி செவ்வாய்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய R W 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | R W1, இரா. ரேவதி |
| தந்தையார் பெயர் | : | S. இராமன் |
| ஊர் | : | திருச்சி |
| வட்டம் | : | திருச்சி |
| மாவட்டம் | : | திருச்சி |
| தொழில் | : | துணை மேலாளர் |
| வயது | : | 50 |

**தேதி: 02.09.2025.**

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவில் 2–ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் துணை மேலாளர் ஆவேன். நான் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.1 ஆக இருந்து எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கின்றேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை என்றும், அவை என்னால் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு எனக்கு படித்து காண்பிக்கப்பட்டது என்றும், அவற்றை நான் சரியென்று ஒப்புக்கொண்டு அதில் கையெழுத்து செய்துள்ளேன் என்றும், பிரமாணத்தின் பேரில் உறுதியளிக்கின்றேன். என்னால் தாக்கல் செய்யப்படும் பின் வரும் ஆவணத்தை எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்து கொள்ள வேண்டுமாய் பிரார்த்திக்கின்றேன்.

1). எங்கள் நிறுவனத்தில் 1–ம் எதிர்மனுதாரர் வாகனம் காப்பீடு செய்யப்பட்டதற்கான காப்பீடு மற்றும் விதிகள் அடங்கிய சான்றிதழின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். அது **எ.ம.சா.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

1–ம் எதிர்மனுதாரர் வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி காப்பீட்டின்படி 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் ஓட்டுநர் உட்பட 10 நபர்களுக்கு அமரும் வசதி உள்ளது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.1 காப்பீட்டு ஆவணத்தின்படி 9 நபர்களுக்கு தலா ரூ.50/–வீதம் ரூ.450/–ற்கு பிரிமியம் செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் இந்திய மோட்டார் டாரிப் 16–ன்படி குறிப்பிடப்பட்டுள்ள காயங்களுக்கு மட்டுமே மேற்படி பிரிமியம் பொருந்தும். மேற்படி விவரத்தை 1–ம் எதிர்மனுதாரரிடம் தெரிவித்துள்ளோம். எங்கள் அலுவலக கோப்பின் அடிப்படையில் 6 நபர்கள் இழப்பீடு கோரி மனுதாக்கல் செய்துள்ளனர். இந்த விபத்து சம்மந்தமாக நான் வேறு நீதிமன்றத்தில் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. நாங்கள் 9 நபர்களுக்கு காப்பீடு பிரிமியம் பெற்றுள்ளதால் மேற்படி 9 நபர்களுக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் இந்திய மோட்டார் டாரிப் 16 குறித்து 1–ம் எதிர்மனுதாரரிடம் எதுவும் கூறாமல் தற்போது மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்கக் கூடாது என்ற எண்ணத்தில் மேற்படி இந்திய மோட்டார் டாரிப் 16 குறித்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:– இல்லை.</u>**

ஒப்பம்/– கி.முரளிதரக்கண்ணன்,<br>
தலைமை நீதித்துறை நடுவர்,<br>
பெரம்பலூர்.